## துவக்காலம் முதல் வாரம் – சனி

**முதல் வாசகம்:**

உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினமாய் நீ இருப்பாய்.

**இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம். 26 : 16 – 19**

மோசே மக்களை நோக்கிக் கூறியது: "இந்த முறைமைகளையும் நியமங்களையும் நீ நிறைவேற்றுமாறு உன் கடவுளாகிய ஆண்டவர் இன்று உனக்குக் கட்டளையிட்டுள்ளார். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அவற்றை நிறைவேற்றுவதில் கருத்தாயிரு. ஆண்டவரை உன் கடவுளாய் ஏற்பதாகவும், உனக்குக் கடவுளாக இருப்பார் என்றும், அவருடைய வழிகளில் நடப்பதாகவும், அவருடைய நியமங்களையும் கட்டளைகளையும் முறைமைகளையும் கடைப் பிடிப்பதாகவும், அவர் குரலுக்குச் செவி கொடுப்பதாகவும் இன்று நீ அவருக்கு வாக்களித்துள்ளாய். நீ அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால், அவர் கூறியபடியே நீ அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்பாய் என்றும், அவர் உருவாக்கிய எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும் உன்னையே உயர்த்துவார் என்றும், அதனால் உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினமாய் நீ இருப்பாய் என்றும் ஆண்டவர் இன்று உனக்கு வாக்களித்துள்ளார்."

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 119 : 1 – 2, 4 – 5, 7 – 8 (பல்லவி: 1b)**

**பல்லவி: ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.**

1. மாசற்ற வழியில் நடப்போர் பேறுபெற்றோர். ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர். அவர் தந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிப்போர் பேறு பெற்றோர். முழுமனத்தோடு அவரைத் தேடுவோர் பேறுபெற்றோர். பல்லவி

2. ஆண்டவரே! நீர் உம் நியமங்களைத் தந்தீர். அவற்றை நாங்கள் முழுமையாய்க் கடைப்பிடிக்க வேண்டும் என்றீர். உம்முடைய விதிமுறைகளை நான் கடைப்பிடிக்க, என் நடத்தை உறதியுள்ளதாய் இருந்தால் எவ்வளவோ நலம்! பல்லவி
3. உம் நீதி நெறிகளை நான் கற்றுக்கொண்டு நேரிய உள்ளத்தோடு உம்மைப் புகழ்வேன். உம் விதிமுறைகளை நான் கடைப்பிடிப்பேன் என்னை ஒருபோதும் கைவிட்டுவிடாதேயும். பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்: 2 கொரி 6: 2b**

இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

**நற்செய்தி வாசகம்:**

உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 5 : 43 – 48**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக. பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக" எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரிதண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியாக அலசி, ஆய்வு செய்து, மாற்றிக்கொள்ள அழைப்பு விடுக்கும் காலம். இன்றைய வாசகம் நம்மைத் துன்புறுத்துவோருடன் நமக்குள்ள உறவை மறு ஆய்வு செய்ய அழைக்கின்றது.

உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் என்கிறார் இயேசு. கிறிஸ்தவ வாழ்வின் மிகப் பெரும் சவால்களுள் ஒன்றாக இது கருதப்படுகிறது. மனித இயல்பை மீறி, இறைத்தன்மைக்குள் இட்டுச் செல்லும் அழைப்பு இது. எனவேதான், இப்படிச் செய்வதால் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் என்றார் இயேசு. கடினமான அழைப்பு, ஆனால் முடியாதது அல்ல. காலம் காலமாக திருச்சபையின் மறைசாட்சிகள், மாபெரும் புனிதர்கள் செய்து வந்த ஒன்றுதான். இயேசுவே சிலுவையில் தொங்கியபொழுது தன் பகையாளருக்காகப் பரிந்து பேசி செபித்து, நமக்கெல்லாம் பாதை காட்டியிருக்கிறார். எனவே, நாமும் அதைச் செய்யலாம். செய்ய வேண்டும். இத்தவக்காலம் அதற்கான பொருத்தமான காலம். எனவே, நமது துன்புறுத்துவோர் பட்டியலில் உள்ள ஒவ்வொருவரையும் நினைவுகூர்ந்து, அவர்களுக்காக இறைவனை மன்றாடுவோம். இறைத் தந்தையின் பிள்ளைகள் ஆவோம்.

**********